# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD
FOR THE PEOPLE"
Isaiah 62 : 10**



**Translated from BS 878**
**Published on Mar 28, 2014**


பொருளடக்கம்

## உறைந்தமழை (பனி) மற்றும் கல்மழையின் அதிசயங்கள்


**BS Tamil Version - 24**

**2014**



# உறைந்தமழை (பனி) மற்றும் கல்மழையின் அதிசயங்கள்

## Wonders of Snow and Hail

**"உறைந்த மழையின் பண்டசாலைகளுக்குள் நீ பிரவேசித்தாயோ? கல் மழையிருக்கிற பண்டசாலைகளைப் பார்த்தாயோ? ஆபத்து வருங்காலத்திலும், கலகமும் யுத்தமும் வருங்காலத்திலும், பிரயோகிக்கும்படி நான் அவைகளை வைத்துவைத்திருக்கிறேன்."** (யோபு 38 : 22, 23).

யோபுவின் புஸ்தகம் 38-ஆம் அதிகாரத்தில், யேகோவா தாம் சிருஷ்டித்திருக்கிறவைகளிலுள்ள அதிசயங்களையும், தாம் ஸ்தாபித்திருக்கிற இயற்கையின் நியமங்களையும், முதலாவதாக, பூமியிலுள்ள உயிரற்றவைகளின் சிருஷ்டிப்பையும், (வச. 4-30), அதின் பின்பு வான மண்டலங்களையும் (வச. 31-38), முடிவாக மனுஷனுக்கு கீழ் நிலையிலுள்ள தமது சிருஷ்டிகளையும் குறித்து (வச. 39-41), யோபினிடத்தில் அநேக கேள்விகளைக் கேட்டார். மேலும் பின்னால் கூறப்பட்டிருப்பவை சம்பந்தமான கேள்விகளை 39-ஆம் அதிகாரத்திலும் தொடர்கிறார்.

தேவன் தாம் சிருஷ்டித்தவைகளில் அமைந்துள்ள அற்புதமான தம்முடைய வேலைப்பாடுகளையும், அதின் அதிசயங்களையும் அதின் அழகைக் குறித்தும், தம்முடைய மாட்சிமையையும், அதின் நேர்த்தியையும் குறித்து நாம் பயபக்தியுடன் சிந்திக்கும்படியாக இவ்விதமாக அவர் நம்மை உற்சாகப்படுத்துகிறார். மேலும், பூமியையும், அதின் அஸ்திபாரத்தையும் (யோபு 38 : 4), அதின் அளவையும் (வச. 5), அதின் விசாலங்களையும் (வச. 18), அதின் புவிஈர்ப்பு விசையின் விதியையும், அதின் விசையின் முக்கியமான விதியையும் (வச. 6), அவை செயல்படத் தொடங்கியதை தூதர்கள் ஏகமாய் கெம்பீரித்து அறிவித்ததையும் (வச. 7), சமுத்திரத்தையும் (வச.8, 11, 16), மேகத்தையும் (வச. 9, 10), வெளிச்சத்தையும் இருளையும் (வச. 12-15, 19-21, 24), மரணத்தையும் (வச. 17), பனி, கல்மழை, மழை, பனித்துளி, உறைந்தமழை மற்றும் பனிக்கட்டிகளையும் (வச. 22 , 23, 26-30), ஊற்றுகளையும், நீர்கால்களையும், வெள்ளத்தையும், மின்னல்களையும் மற்றும் இடிமுழக்கங்களையும் (வச. 25) பயபக்தியுடன் நாம் சிந்திக்கும்படி நம்மை அவர் உற்சாகப்படுத்துகிறார்.

வானமண்டலங்களிலுள்ளவைகள் சம்பந்தமாக தமது ஆச்சரியமான சிருஷ்டிப்பின் வேலைகளின் அதிசயங்களை குறித்து சிந்திக்கும்படியாக தேவன் நம்மை



**பனித்துகள்களின் புகைப்படங்கள்**

அழைக்கிறார். நட்சத்திரக் கூட்டங்களையும் (வச. 31, 32), நட்சத்திரங்களுக்கும், நட்சத்திர கூட்டங்களுக்கும் அப்பாற்பட்ட அதின் சுகிர்த சம்பந்தத்தையும் (வச. 33), மேகங்களையும் மின்னல்களையும் (வச. 34, 35, 37, 38), அவற்றில் அடங்கியிருக்கும் நியமங்களையும் (வச. 36), மற்றும் தம்முடைய மிருக வர்க்க சிருஷ்டிப்பையும் குறித்து (வச. 39-41; 39-ம் அதிகாரம்) சிந்திக்கும்படியாக அழைக்கிறார்.

யோபு தேவனுடைய பெரிதான ஆச்சரியமான கிரியைகளை ஆழ்ந்து சிந்தித்தபடியால், அவைகள்

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*


எல்லாவற்றையும் குறித்து அறிந்திருந்ததோடு, தன்னுடைய அபூரணம், மற்றும் குறைவுகளின் மத்தியிலும் (40 : 3-5; 42 : 1-6), தேவனுடைய ஆச்சரியமான மாட்சிமையும் அதின் பூரண தன்மையும் அவரை மனங்கவரச் செய்தது. அதேபோல, பூமியிலும் வானங்களிலும் இருக்கிற தேவனுடைய கைவேலையின் அதிசயங்களை நாம் சிந்தித்தோமானால், யோபுவைப் போன்று நம்மையும் அது மனங்கவரச் செய்யும்.

நமது பாடப்பகுதியானது, குறிப்பாக உறைந்த மழையின் (பனி - snow) பண்டசாலையைக் குறித்தும் ஆராயும்படி கூறுகிறது. உறைந்த மழையையும், கல்மழையையும் குறித்து நாம் கருத்தில் கொள்ளத்தக்க எந்தவொரு சிறப்பு அம்சமும் இராது என சிலர் எண்ணலாம். ஆனால், தேவனுடைய அதிசயங்கள், அவருடைய கரத்தின் கிரியை இந்த காரியங்களில்கூட காணப்படுகின்றன.

"E.Vol 2' 'சிருஷ்டிப்பு' என்ற புத்தகத்தில், உலகத்திலுள்ள திடப்பொருட்களின் ஏழு சிறப்பு அம்சங்களாகிய அதின் ஒற்றுமை (unity), அளவற்ற தன்மை (immensity), அழகு (beauty), தரம் (sublimity), ஒழுங்கு (order), அதிசயத் தன்மை (wondrousness) மற்றும் அதின் சிக்கலானத் தன்மைகள் (complexity) விவரிக்கப் பட்டுள்ளது. இவற்றுள் முதலாவதான 'ஒற்றுமை' என்பதிலும் பல வேற்றுமைகளும் அல்லது வகைககளும் உள்ளன. பொருட்கள் அனைத்தும் மூன்று வகைப்படும். அவை மிருக வர்க்கம், தாவர வர்க்கம் மற்றும் தாது வர்க்கம் ஆகும். அவை திண்மம், திரவம் மற்றும் வாயு என்ற மூன்று நிலைகளில் காணப்படும். ஆனாலும், இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட நிலைகளுக்குள்ளும் பல்வேறு நிலைகள் உள்ளன என்பது ஒவ்வொரு காரியத்திலும் வெளிப்படுகிறது.

தாது வகைகள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுவதை நாம் காண்கிறோம். திடப் பொருட்களை வெப்பப்படுத்தும்போது, அவை திரவ நிலைக்கு உருகி மாறுகிறது. இவ்விதமாக, திரவத்தை வெப்பப்படுத்தும் போதும் அவை ஆவியாகவோ அல்லது வாயுவாகவோ மாறுகிறது. வாயுவானது வெப்பத்தை இழக்கும் பட்சத்தில், அது திரவமாகவோ அல்லது திடப்பொருளாகவோ மாறுகிறது. அநேக வேதிப் பொருட்கள் திரவ மற்றும் வாயு நிலையிலிருந்து திடப்பொருளாக மாறுகிறபோது ஓர் விதமான படிக நிலையை எடுக்கிறது. நிறைவுற்ற கரைசல்களால் கரைப்பான் ஆவியாதலின் மூலமாக திடப் பொருட்களை உருவாக்கலாம். கீழ்க்கண்ட வரைபடத்தை பார்க்கவும்.

அநேக நிலையான வேதிப் பொருட்கள் இயற்கையாகவே படிகமாக்கப்பட்ட நிலைகளில் காணப்படுகின்றன.




உதாரணமாக 'வைரம்' இயற்கையாக கிடைக்கப் பெறுகிறது. வைரமானது படிக நிலையிலுள்ள தூய கரிமம் (கார்பன்) ஆகும். குறிப்பிட்ட சூழ்நிலைகளின் கீழ், மூல பொருட்களும் மூலகங்களும் அநேக விதங்களில் பிரத்தியேகமான வடிவங்களைப் பெறுகிறது. ஒரு படிகமானது அநேக சிறிய சிறிய அணு குழுக்களினால் நேர்த்தியான முறையில் வரிசைப்படுத்தப்பட்டிருக்கிற தினால் அவ்வடிவத்தைப் பெற்றிருக்கிறது. ஓர் படிகத்தின் வடிவமானது நேர்த்தியுடனும், அதன் பரப்பும் கோணங்களும் ஒழுங்காகவும் சீராகவும், தெளிவாகவும் இருப்ப தினால் அது விசேஷமாக நம்முடைய ஆர்வத்தைத் தூண்டுகிறது.

ஒரு படிகம் உருவாகும்போது, அதனுடைய அனைத்து புறங்களிலும் வடிவ கணிதத்தின் அடிப்படையில் ஓர் சீரான முறையில் விரிவடைவதோடு, அதனுடைய புறங்கள் ஒவ்வொன்றும் நேர்த்தியான கோணத்தில் விலகி வளர்கிறது. ஒவ்வொரு தாதுப் பொருளும் படிகமாக்கு கையில், அதனுடைய மூலக் கூறுகளை அதனுடைய குறிப்பிட்ட திட்டப்படியே ஒழுங்காக அமைக்கிறது. அந்த ஒழுங்கை விட்டு அவை ஒருபோதும் விலகுவதில்லை. தனக்கென வைத்திருக்கும் அந்த ஒழுங்கை மற்றொரு தாது பொருட்களோடு அவை பங்கிட்டுக் கொள்வதில்லை. பொதுவாக, தாது பொருட்களானது அதனுடைய தனித்துவமான கோணத்தினாலும், உருவ அமைப் பினாலும், அதின் படிக முறை வடிவத்தினாலும் கண்டறியப்படுகிறது.

ஒரு திடப்பொருளின் மீது வெப்பத்தை அதிகரித்து உருக செய்து திரவ நிலைக்கு மாற்றும்போதோ அல்லது ஒரு திரவத்தின் வெப்பத்தை அதிகரித்து அதனை வாயு நிலைக்கு மாற்றும்போதோ, நாம் எந்தவொரு திடப்பொருளையும் அதனோடு கூட்டுவதில்லை. அதாவது, ஒரு கனமுடைய (நிறையுடைய) எதையும் நாம் கூட்டுவதில்லை, மாறாக, ஒரு முக்கியமான ஒரு உண்மையான ஒன்றை அதோடு கூட்டுகிறோம். கொதி நிலையில் இருக்கிற எந்தவொரு பொருளும் அது குளிர்ந்த தன்மையில்

இருந்த நிறையைவிட அதிகமாயிருப்பதில்லை. அப்படியானால், நாம் அதனோடு கூட்டிய பொருள் ஒரு திடப் பொருள் அல்ல, ஆனால், மிகவும் விசேஷித்த தனிப்பட்ட வகையான அசைவை அவற்றோடு கூட்டுகிறோம். இந்த அசைவானது எல்லாவற்றிலும் வித்தியாசமானதாகும். ஒரு பொருள் உண்டாக்கப்பட்டுள்ள அணுக்கள் அல்லது மூலக்கூறுகள் முன்னும்பின்னும் அசைந்து கொண்டிருக்கும் – அதிர்வு எனப்படும்.

ஆகையால், தண்ணீரிலும் குறிப்பிட்ட அளவு வெப்பம் இருக்கின்றது. அதினுடைய மூலக்கூறுகள் குறிப்பிட்ட வேகத்தில் முன்னும் பின்னும் குறிப்பிட்ட அலைவீச்சில் அதிர்ந்துகொண்டே இருக்கின்றது. வெப்பத்தை அதிகரிக்கும்போது அதனுடைய அதிர்வு அதிகரிக்கின்றது. தண்ணீரை கொதிநிலைக்கு கொண்டு வருவதற்கு ஓர் குறிப்பிட்ட அளவான வெப்பத்தை செலுத்துகையில், அதின் மூலக்கூறுகள் தடையின்றி வேகமாக முன்னும் பின்னும் அசைய முடியாமல், நீர்ம தண்ணிரிலுள்ளபடி அவைகளைக் கட்டுக்குள் வைக்க முடிவதில்லை. ஆகையால் அவை ஆவி நிலையை (வாயு) அடைகிறது. அது திரவ நிலையை விட்டு நீராவியாக மாறுகிறது. ஓர் குறிப்பிட்ட அளவு வெப்பத்திற்கு மேல் அதிகமாய் செலுத்தினாலும் அவை தண்ணீராக இருப்பதில்லை.

சுற்றுப்புற அழுத்தம் சீராக இருக்கும் பட்சத்தில், திரவ நிலையிலுள்ள தண்ணீரிலிருந்து வெப்பத்தை நீக்கும் போது தண்ணீரிலுள்ள மூலக்கூறுகள் இனி நீர்ம தண்ணீருக்குரிய தன்மையில் இயங்குவதில்லை. வெப்பம் என்று நாம் அழைக்கிற ஒரு குறிப்பிட்ட வகையான இயக்கம் அதில் குறைவுபடுவதால், இந்த மூலக்கூறுகள்




ஒரு வித்தியாசமான முறையில் அமைந்து உறைந்து கெட்டியாகிறது. அதை நாம் பனிக்கட்டி (ice) என்று அழைக்கிறோம்.

## உறைந்த மழை (பனி) உருவாகும் விதம்

நாம் இப்பொழுது உறைந்த மழை (snow) என்ற பாடத்தை கற்று கொள்வதற்கு ஆயத்தமுள்ளவர்களாயிருக்கிறோம். அதனை படிப்பதென்பதே விசேஷமானது என அறிகிறோம். பனிப்படிகங்கள் மிக உயரத்தில் உருவாகிறது. அவை காற்று மண்டலத்தில் விரவியுள்ள நீராவியிலிருந்து திரவ நிலையை நேரடியாக அடையாமல் பனிப்படிகங்களாக (snow crystals) உருவாகுகையில், அதனுடைய மூலக்கூறுகள் தடையில்லாமல் இயங்குவதற்கு சாதகமான சூழ்நிலைகளின் கீழ் வளர்கிறது. அநேக விதங்களில் பனிப்படிக அமைப்பு காணப்படுவதை இந்த உண்மை விளக்குகிறது. இத்தனை விதங்கள் எந்தவொரு தாதுபொருட்களிலும் இருக்கிறதில்லை. நூற்றிற்கும் அதிகமான வித்தியாசமான வகைகள் கண்டுபிடிக்கப்பட்டு வரையப்பட்டுள்ளன. அவை மனுக்குலத்திற்கு தங்களுடைய சிறந்த உருவங்களையும் வடிவங்களையும் கொடுத்திருக்கிறது.

அநேக வித்தியாசமான விதங்களில் பனிப் படிகங்கள் காணப்படுகிற போதிலும், அதில் ஒற்றுமையும் காணப்படுகிறது. அவைகள் அனைத்தும் கிட்டத்தட்ட வித்தியாசமில்லாமல் அறுங்கோணகட்டமைப்பு கொண்டதாய் இருக்கின்றன. இருப்பினும் அவற்றின் வகைகளுக்கு முடிவில்லை. அவைகள் பொதுவாக மெல்லிய குழாய் தகடுகள், நீளமான ஊசிகள், அல்லது தூண் போன்ற வடிவங்களில் உள்ளன. உறைநிலைக்கு கீழுள்ள வெப்பநிலையில் காற்றில் பனித்துகள்கள் உருவாகின்றன. அவைகளில் அநேக வடிவங்கள் வியக்க வைக்கும் அழகு மிகுந்ததாய் காணப்படுகிறது. ஒரு சிறிய பனிப் படிகத்தை கருப்பு திரைக்கு முன்பாக வைத்து பார்க்கும்போது, அந்த படிகத்தின் முழு அழகு இமைப்பொழுதிலே தெரியவரும். ஆனால் சற்று நேரத்தில் அது தன்னுடைய ஆரம்ப நிலையாகிய தண்ணீர் நிலைக்கு மாறிவிடும். ஆனால் நம்முடைய புகைப்பட கருவியில் சிறந்த ஒரு உருப்பெருக்கி லென்ஸ்ஸை பொருத்தி, அதின் அழகை புகைப்படத்தில் பாதுகாத்துக் கொள்ளலாம்.

முதல் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள வரைபடமானது வெவ்வெறு விதமான பன்னிரண்டு முழுவடிவ உறைந்தமழை படிகங்கள் நன்றாக பெரிதுபடுத்தி காட்டப்பட்டிருக்கிறது. அதின் அழகை கவனிக்கவும். அவை அனைத்தும் ஆறு கிளைகளுடைய நட்சத்திரங்கள் வடிவில் இருக்கிறது. அனைத்து கிளைகளுக்குமுரிய பொதுவான மையப் பகுதி ஏழாவது எண்ணைக் குறிக்கிறது. அது தெய்வீக பூரணத்தைக் குறிப்பிடுகிறது. பனிப் படிகமானது ஒரு உட்கரு மேல் உருவாகிறது. சில

நேரங்களில், ஒரு மழைதுளி போல தனியாகவே தரையை வந்தடைகிறது. ஆனால் பொதுவாக அவை சிறு சிறு நிறையுடன் கூடிய படிகங்கள் கூட்டிசைந்து பனித் துணுக்குகளாகத் தரையை வந்தடைகின்றன. சில வேளைகளில் அவை 2 $^1/_2$ அங்குல விட்டம் கொண்டதாயும் இருந்திருக்கிறது.


முதலில் பனிப் படிகங்கள் மிக சிறிய அளவில் தான் இருக்கும். ஆனால், காற்று, தண்ணீர், வெப்பநிலை, மின்சாரம் முதலியவற்றின் செயல்பாடுகளால் அவை விரைவில் ஒரு வடிவத்தையும் நிறையையும் பெற்ற பின் விழத் தொடங்குகிறது. இயற்கை விதிகளின்படி தேவன் அவற்றை இயக்கச் செய்கிறார். "**அவர் உறைந்த மழையை..... பார்த்து, பூமியின் மேல் பெய்யுங்கள் என்று கட்டளையிடுகிறார்.**" (யோபு 37 : 6). **அவை அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறது.**" "**பஞ்சைப் போல் உறைந்த மழையைத் தருகிறார்.**" (சங். 147 : 16).

பனித்துணுக்குகள் பெய்கின்ற காட்சியை காண் பது நம்மை மெய்மறக்கச் செய்கின்றது! அவைகள் விழுகிறபோது, ஒன்றொடொன்று நெருக்கமாக ஒட்டிக் கொண்டு சற்று பெரிதாகி அதின் மேல்பரப்பு சற்று சமமாயிராததால், பின்பு அவைகள் (வானிலே) உருட்டப் பட்டு கட்டுக்கடங்காத காற்று வீச்சினால் இங்கும் அங்கும் தள்ளப்பட்டு மறுபடியும் அவைகள் வானத்திற்கு நேராய் மேலே சுண்டப்படுகிறது. சில நிமிடங்களில் அவைகள் பூமியை நோக்கி வருகிற வேறே பனித்துணுக்கு சகோதரர்களை சந்திப்பதினால், அவர்களோடு இணைந்து அந்த பவனியில் கலந்துகொண்டு பின்னர் பூமியின் மடியில் உள்ள மென்மையான இறகு படுக்கையில் தங்களுடைய இளைப்பாறும் இடத்தில் அடைக்கல மாகிறது.

அவைகள் பொழிகிறபோது பூமியை, கண்கவர் அழகும், மேன்மையான அமைதியும் உள்ளதாக மாற்றுகிறது. சிறு சிறு படிகத்துகள்களினால் ஏராளமான பிரதிபலிக்கும் பரப்புகள் உருவாவதால் உறைந்த பனியானது வெண்மை நிறத்தில் காணப்படுகிறது. அதின் பரப்புகளில் படுகிற எந்தவொரு வெண்மையான வெளிச்சக் கதிர்களின் பகுதியையும் அவை பிடித்து வைக்காமல் அனைத்தையும் திருப்பி அனுப்புவதினால் உறைந்த பனியானது வெண்மை நிறத்தில் காணப்படுகிறது. இந்த தூய்மையான வெண் பனி பூமியின் மிகவும் வறண்ட பாழான இடத்தையும் போர்வையாக மூடி அதை அழகு மிகுந்ததாக்குகிறது.

## கல்மழை (ஆலங்கட்டிமழை) உருவாகும் விதம்


கல்மழையிருக்கிற பண்ட சாலைகளைக் குறித்தும் நாம் கவனிக்க வேண்டும் என நமது பாட வாக்கியம் கூறுகிறது. கல் மழையானது உறைந்த மழையை




கல்மழை உருவாகுதல்

(பனியை) விட வேறான தன்மை உடையது என்றாலும் இரண்டுமே தண்ணீரினால் உண்டாயிருக்கிறதென்று காண்கிறோம். கல் மழையானது, உறை மழையைப் போலவே பனிப் படிகங்களால் அல்லது (தண்ணீர் படிகங்களால்) உண்டாயிருக்கிறது. உறைந்த பனிக்கும் கல் மழைக்கும் எந்தவொரு வேதியியல் வேறுபாடும் கிடையாது. இரண்டும் ஒரே வேதியியல் கூறான 'நீரால்' உண்டாயிருக்கிறது. நீராவி அல்லது தண்ணீர் ஆகாயத்தில் உறைந்து படிகங்கள் உருவாகும் விதங்களிலும், அந்த படிகங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளும் முறைகளிலும் வேறுபடுகிறது.

வானத்தில் அதிக அளவில் நீராவி இருக்கையில், திடீரென காற்று குளிர்ந்து உருவாகும் படிகங்களை கல் மழை கட்டிகளாக மாற்றுகிறது. கோடை காலத்தில் பொதுவாக காற்றானது அதிக நீராவியை உள்ளடக்கி வைத்திருக்கிறதினால், திடீர் குளிர் காற்றினால் அவை கல்மழையாக மாறுகிறது. ஈரப்பதம் குறைந்திருக்கும்போது அவ்வாறு நிகழ்வதில்லை. ஆதனால் கோடை காலத்தில் மட்டுமே கல் மழையை பார்க்க முடிகிறது. குளிர் காலத்தில் காண முடிவதில்லை. குளிர் காலத்தில் படிகமாகுதல் மிகவும் மெதுவாக நடை பெறுவதால் பனிப்பொழிவு அதிகமாக குளிர்காலத்தில்தான் உருவாகிறது.



2 $^1/_2$ அங்குலம் அளவுள்ள ஆலங்கட்டி

கல் மழை கட்டிகளின் குறுக்கு வெட்டு தோற்றம் சில வேளைகளில் திட்டமான படிக வடிவங்களையும் அழகையும் வெளிப்படுத்துகிறது. என்றாலும், அவை பனித்துணிக்கைகளைப் போன்று உடனடியாகப் பகுத்து ணர்ந்து வியக்க வைக்கிறதில்லை. கல் மழைக் கட்டிகள்

அளவுகளில் வேறுபடுகிறது. சில கட்டிகள் நான்கு முதல் ஐந்து அங்குல விட்டம் வரை உள்ளதாக அறியப் பட்டுள்ளது. 1928-யில் அமெரிக்காவில் நெப்ராஸ்கா என்ற இடத்தில் மிக பெரிய கல்மழைக் கட்டி ஒன்று விழுந்ததாக பதிவாயிருக்கிறது. அது 17 அங்குல நீளமும் 1 $^1/_2$ பவுண்ட் (சுமார் 1 $^3/_4$ கிலோ) எடையும் இருந்திருக்கிறது. குறிப்பாக, பெரிய கட்டிகள் அதிக அளவில் விழுந்தால் தாவரங்களுக்கும், மிருக ஜீவன்களுக்கும், கட்டிடங் களுக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்தும். (சங். 78 : 47, 48).

மேலும் அநேக வேத வாக்கியங்கள் கல் மழையைக் குறித்தும் உறைந்த மழையைக் குறித்தும் குறிப்பிடுகின்றன. உறைந்த மழையானது பாலஸ்தீன தேசத்தின் மலை பகுதிகளாகிய கலிலேயா, நாசரேத், எருசலேம், எப்பிரோன் போன்ற இடங்களில் காணப் படுகின்றன. என்றாலும், இந்த இடங்களில் அவை அபூர்வமாக ஒரு நாளைக்கு மேல் கிடப்பதுமுண்டு. அடிக்கடி குளிர்காலமானது எதுவுமில்லாமல் கடந்து செல்லுகிறது. லீபனோன் மலையில் கோடைகால முடிவு வரை அது நீடித்திருந்து, எர்மோன் மலை உச்சியின்மேல் வருடம் முழுவதும் கிரீடமாக இருக்கிறது. 2 சாமு. 23 : 20 (1 நாளா. 11 : 22) ஆகிய வசனங்களில் '**உறைந்த மழை காலத்தை**' பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. "**உஷ்ண காலத்தில் உறைந்த பனி**" (நீதி. 26 : 1) அதாவது பனிப் பொழிவு என்ற கருத்தில் நிச்சயமாக காலத்திற்கேற்றதல்ல. ஆனால் குளிர் காலத்தில், மலைக் குகைகளில் அதிக அளவில் சேமிக்கப்பட்டிருந்த பனிப் பாளங்கள் கோடை காலத்தில் நகரங்களுக்கு கொண்டு வரப்பட்டு, அவை குளிர் பானங்களை குளிர்விக்கிறதற்கும் குளிர்ச்சியூட்டும் உபயோகங்களுக்கும் பனிக்கட்டிகள் (ஐஸ்கட்டிகள்) உபயோகப்படுத்தப்பட்டன. அது அறுப்பு காலத்தில் சோர்ந்துபோன வேலையாட்களுக்கு பெரிதும் புத்துணர்ச்சி யூட்டுகிறதாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. (நீதி. 25 : 13).

## தண்ணீர் சத்தியத்திற்கு அடையாளம்

உறைந்த மழையையும், கல்மழையையும் உருவாக்குகிற தண்ணீர் வேத வாக்கியங்களில் சத்தியத் திற்கு அடையாளமாக விசேஷமாக, அதன் சுத்திகரிக்கும், தாகம் தீர்க்கும், ஊட்டமளிக்கும் பயன்களில் குறிப்பாக தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தை குறிப்பிடு வதற்கு உபயோகிக்கப்படுத்தப்பட்டிருக்கிறது. (யோவா. 4 : 10-14). சுத்திகரிக்கும் கருத்தில் இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில், "**நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத் தினாலே நீங்கள் இப்பொழுது சுத்தமாயிருக்கிறீர்கள்**" என்று கூறியதை நாம் காண்கிறோம். (யோவா. 15 : 3). மேலும் பரி. பவுல் சபைக்கு கூறுகையில், "**தாம்** (இயேசு) **அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும் ....... ஒப்புக்கொடுத்தார்**"



இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்.

**யோவான் 4 : 10**

(எபே. 5 : 26; எசே. 36 : 25) என்றும், "**துர்மனச்சாட்சி நீங்க தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும்....**" (எபி. 10 : 22) என்றும் குறிப்பிடுகிறார். அடையாளத்தில் (யாத். 30 : 18-21), ஆசரிப்பு கூடார தொட்டியிலும், அதின் அடிப் பாகத்திலும், கழுவுவதற்காக ஊற்றப்பட்டிருந்த தண்ணீர், பாவம், தப்பறை, தன்னயம் (சுயநலம்), உலகத்தனத்தின் அசுத்தங்களிலிருந்து நம்மைக் கழுவி சுத்திகரிப்பதற்காக வேதாகமத்தில் (குறிப்பாக புதிய ஏற்பாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும்) அடங்கியிருக்கிற சத்தியத்தை சித்தரித்துக் காட்டுகிறது. மேலும், உபாகமம் 32 : 2 (சங். 72 : 6)-ஆகிய வசனங்களில் தேவன் தமது உபதேசத்தையும் (சத்தியத்தை), தமது வாய்மொழியையும் (அவருடைய வார்த்தையை) "**இளம் பயிரின்மேல் பொழியும் மழை** – பனித்துளி மற்றும் தூறல்" (எளிதான சத்தியங்கள், குறிப்பாக போதிய அளவிற்கு வளராதவர்களுக்கு உரிய அடிப்படை சத்தியங்கள்), மற்றும் – "**புல்லின்மேல்** [பலமாய்] **பெய்கிற மழையிலுள்ள தண்ணீரோடு**" (வளர்ந்தவர் களுக்கான ஆழமான கடின சத்தியங்களுக்கும்) நேரடி யாக ஒப்பிடுகிறார்.

## உறைந்தமழை (பனி) – ஓர் வேதாகம அடையாளம்

சுத்தமான தண்ணீரானது விசேஷமாக அதன் சுத்திகரிக்கும், தாகம் தீர்க்கும், ஊட்டமளிக்கும் பயன்களில் தேவனுடைய வார்த்தையாகிய சுத்தமான சத்தியத்தை அடையாளப்படுத்துகிறது. அதுபோல, உறைந்த மழை யானது அதே தோற்றங்களில் கிடைக்கக்கூடிய சுத்தமான சத்தியத்திற்கு அடையாளமாய் இருக்கிறதென்று வேத வாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. சுத்திகரிப்பு சம்பந்தமாக "**நான் உறைந்த மழைத் தண்ணீரில் முழுகி என் கைகளைச் சவுக்காரத்தினால் சுத்தம் பண்ணினாலும்**" (யோபு 9 : 30) என்று குறிப்பிடப்பட்டிருப்பதின் மூலம் உறைந்த மழையின் தண்ணீரை விசேஷமான சுத்திகரிப்பு பொருளாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிடைக்கக்கூடிய தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தை புரிந்து கொண்டு பயன்படுத்தும்போது (உறைந்தமழை உருகுதல்) மிகச் சிறந்த சுத்திகரிக்கும் பொருளாய் அமைகிறது. அதின்



வானத்திலிருந்து இறங்குகிற உறைந்தமழையும், மாரியும் அவைகளுடைய உபயோகத்தின் மூலமாக பூமிக்கு புத்துணர்ச்சியூட்டி அதனை செழிப்பாக்குகிறதுபோல, ஏசா. 55 : 10, 11–ல் குறிப்பிட்டுள்ளபடி, அனுப்பப்பட்ட தேவனுடைய வார்த்தை அவருக்குப் பிரியமானதை நிறைவேற்றி அனுப்பட்ட காரியம் வாய்க்கும்படி செய்யும்.

தாகம் தீர்க்கும் ஊட்டமளிக்கும் பயன்களில் எரே. 18 : 14–ல் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அங்கே உறைந்த மழையும், ஓடிவருகிற தண்ணீரும் நீதிமானாக்குதலினாலும், பிரதிஷ்டையினாலும் அடைகிற புத்துயிர் ஊட்டுகிற சத்தியத்தை குறிப்பதற்கு உபயோகிக்கப்பட்டிருக்கிறது. வானத்திலிருந்து இறங்குகிற உறைந்தமழையும், மாரியும் அவைகளுடைய உபயோகத்தின் மூலமாக பூமிக்கு புத்துணர்ச்சியூட்டி அதனை செழிப்பாக்குகிறதுபோல, அனுப்பப்பட்ட தேவனுடைய வார்த்தை அவருக்குப் பிரியமானதை நிறைவேற்றி அனுப்பட்ட காரியம் வாய்க்கும்படி செய்யும். “**மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ, அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்: அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.**” ஏசா. 55 : 10, 11. கூடுதலாக, உறைந்தமழை வெண்மை நிறத்தை குறிப்பிடுவதற்கு பொதுவாக பயன்படுத்தப்படும் ஒரு வேதாகம அடையாளமாக இருக்கிறது. உண்மையில், உறைந்தமழைக்கான எபிரேய வார்த்தை ஷெலேக் என்பதாகும். அதின் அடிப்படை அர்த்தம் ‘வெண்மை’ என்பதாகும். மிக அழகான, ஆறுதல் அளிக்கும் வேதாகம பகுதிகளில் உறைந்த மழையின் பிரகாசமான வெண்மை மிக உயர்ந்த தரத்தை ஒப்பிடுவதற்கும் அதைப்போல தூய்மையான, சுத்திகரிக்கப்பட்ட நிலைக்கு அடையாளமாகவும் உபயோகிக்கப்பட்டுள்ளது.

எவ்விதம் நம்முடைய “**பாவங்கள்** (ஆழமாக) **சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும்: அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும்** (பண்டைய காலத்து சாயங்களில் மிகவும் நிலைத்திருக்கும் மங்காத சாயம்) **பஞ்சைப் போலாகும்**” (ஏசா. 1 : 18) என்று நம்மோடு பகுத்தாராய்ந்து சீர்தூக்கிப் பார்க்கும்போது நாம் எளிதில் உணரும்படி தேவன் தெளிவுபடுத்தியிருக்கிறார். இதற்காக தேவன் எவ்விதம் ஆயத்தம் பண்ணியிருக்கிறார் என நமக்குக் காட்டுகிறார். பாவங்களுக்கான பலியை அவரே ஏற்பாடு செய்திருக்கிறார். இயேசுவானவர் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் மரித்தார். (1 பேது. 3 : 18). தேவன் நம்மை சேர்த்துக் கொள்ளுகிறபோது அவர் நீதியுள்ளவரென்றும், நம்மோடுள்ள அவருடைய நடவடிக்கைகள் யாவும் நீதியுள்ளது என்றும், ஏனெனில் அவருடைய பிரமாணத்தின் முக்கிய அம்சமாகிய நீதியை, நமது நிமித்தமாக இயேசு முழுவதுமாக நிறைவேற்றினார் (ரோம. 3 : 26) என்றும் காண்பிக்கிறார்.

உலக மனுக்குலத்திற்காக அவர் திட்டம் பண்ணியிருக்கிற ஆசீர்வாதங்களின் ஒரு பகுதியை நமக்கு காண்பித்து, தம்முடைய பலியினால் உலகத்தின் பாவத்தை நிக்கிப்போடுகிற தேவ ஆட்டுக்குட்டியை சுட்டிக் காட்டி, அனுதாபமும் மதித்துணர்தலும் உடையவர்கள் அனைவரையும் நித்திய ஜீவனை மட்டுமல்ல, கிருபையின் மேல் கிருபையைப்பெற்று, “**உலகத்தோற்றமுதல் தேவன்**



மிக அழகான, ஆறுதல் அளிக்கும் வேதாகம பகுதிகளில் உறைந்தமழையின் பிரகாசமான வெண்மை மிக உயர்ந்த தரத்தை ஒப்பிடுவதற்கும் அதைப்போல தூய்மையான, சுத்திகரிக்கப்பட்ட நிலைக்கு அடையாளமாகவும் உபயோகிக்கப்பட்டுள்ளது.

**தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் திரும்ப கொடுக்கப்படும் காலத்தின்**” மகா உயர்த்துதலின் போது உலகத்தை ஆசீர்வதிக்கிற ஆபிரகாமின் வித்தின் ஒரு பகுதியாயிருக்கும் பாக்கியத்தை ஏற்றுக்கொள்ள இப்போது வரும்படி அழைக்கிறார். (அப். 3 : 19–23; கலா. 3 : 7–9).

ஒரு இரத்தாம்பரம் அல்லது சிவப்பு நிறத்திலுள்ள பொருளை ஒரு சிவப்பு கண்ணாடி வழியாக வெளிச்சத்தில் பார்த்தோமானால் அது வெள்ளை நிறத்தில் காணப்படுவது வியக்கத்தக்க உண்மை. அதுபோல, நம்முடைய பாவங்கள் எவ்வளவு இரத்தாம்பர அல்லது சிவப்பு நிறத்தில்

இருந்தாலும், கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக தேவன் அவற்றை பார்க்கும்போது வெண்மையாய் எண்ணப் படுகிறது. நாம் அனைவரும் தீட்டானவர்கள் போலவும், நம்முடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருந்தாலும் (ஏசா. 64 : 6), நம்மிடம் சொந்தமாக எந்த நீதியும் இல்லாதபோதும் நம்முடைய விசுவாசம் நமக்கு நீதியாக எண்ணப்படுகிறது. (ரோம. 4 : 5; கலா. 3 : 6). "**முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினலே சமீபமானீர்கள்**" (எபே. 2 : 13; எபி. 9 : 11-14). "**இயேசு கிறிஸ்துவின் இரத்தம்** (அவருடைய மனிஷீக பலியின் புண்ணியம்) **சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்.**" (1 யோவா. 1 : 7). இயேசுவே, "**நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவினார்.**" (வெளி. 1 : 6; 1 பேது. 1 : 18, 19). (இப்பொழுது இருப்பதுபோன்று இந்த சத்தியமானது முன்பு முழுமையாக வெளிப்படாதிருந்த போதும்,) அந்த காலத்தில் தாவீது செய்தது போல "**என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்**" என்று தேவனிடம் நாம் வேண்டிக்கொள்வது நல்லது. (சங். 51 : 7).

கறைபடாத நிலையிலிருந்த குறிப்பிட்ட நசரேயர் களை "**உறைந்தமழையைப் பார்க்கிலும் சுத்தமாய்**" இருந்தார்கள் என புலம்பல் 4 : 7-ல் நாம் வாசிக்கிறோம். மத். 28 : 3-ல் உறைந்தமழையானது இயேசுவின் கல்லறையருகே இருந்த தூதனுடைய தூய்மையைக் குறித்துக் காட்டுகிறது. அதிகபட்சமாக மிக உயரிய கருத்தில், உறைந்தமழையானது (பனியானது) இயேசு வானவர் மற்றும், யேகோவா தேவனுடைய தூய்மையைக் குறிப்பிடுவதற்கு உபயோகிக்கப்பட்டிருக்கிறது. (மாற். 9 : 3; வெளி. 1 : 14; தானி. 7 : 9).

## கல்மழை (ஆலங்கட்டி மழை) – ஓர் வேதாகம அடையாளம்

கல்மழையானது நீரினால் உருவானதாக இருப்பதால், பனிக்கட்டி (ஐஸ்) நிலையில் இருந்தாலும் அவை சத்தியத்தின் அடையாளமாக, உலக சம்பந்தமான சத்தியத்தையும் மற்றும் தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தையும் குறிப்பாக பின் கூறப்பட்டதை குறிப்பிடும் விதமாக வேதாகமத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், கல்மழையானது அதிக வேதனையளிப்பதும் அழிக்கும் தன்மையுடையதாயும் இருப்பதால், அவை பொதுவாக நியாயத்தீர்ப்பு சம்பந்தமான காரியங்களையும் தப்பறைகளை தகர்ப்பதற்கும், பெருமையைத் தாழ்த்து கிறதற்கும் தேவன் உபயோகிக்கிற கடினமான, கடுந்துன்பம் தரும் சத்தியங்களையும் அவை மிக பொருத்தமாக அடையாளப்படுத்துகிறது. கல்மழைக் கட்டியை உபயோகிப்பதற்கு, அதாவது சுத்தம் செய்வதற்கோ, தாகத்தை தீர்ப்பதற்கோ அல்லது போஷிப்பதற்கோ நீராக பயன்படுத்த வேண்டுமானால் அவை உருக்கப்பட வேண்டும். (தண்ணீர் நிலைக்கு மாற்ற வேண்டும்). மகா உபத்திரவத்திரவ காலத்தில் கடுந்துன்பம் தருகிற சத்தியமானது அவைகளுடைய வேலையைச் செய்து, மனுஷருடைய இருதயங்களை தாழ்த்திய பின்பு அவைகளுடைய ஆசீர்வதிக்கும் வேலையில் சத்தியமானது சுத்திகரித்து, தாகம் தீர்த்து, போஷிக்கும் நோக்கில் செயல்படும்.

> "**உறைந்த மழையின் பண்டசாலைகளுக்குள் நீ பிரவேசித்தாயோ? கல் மழையிருக்கிற பண்ட சாலைகளைப் பார்த்தாயோ? ஆபத்து வருங்காலத்திலும், கலகமும் யுத்தமும் வருங்காலத்திலும், பிரயோகிக்கும்படி நான் அவைகளை வைத்துவைத்திருக்கிறேன்.**" – **யோபு 38 : 22, 23**

நம்முடைய பாட வசனம் தேவன் (யோபு 28 : 22, 23), அவருடைய சத்திய பண்ட சாலைகளுக்குள் குறிப்பிட்ட தேவைகளுக்கு ("பொக்கிஷங்களை" மத். 13 : 52), கடினமான, கடுந்துன்பம்தரும் சத்தியங்களை சேமித்து வைத்திருப்பதை குறிப்பிடுகிறது. மேலும், ஒரு விஷேசித்த காரியத்திற்காக, "**ஆபத்து வருங்காலத்திலும், கலகமும் யுத்தமும் வருங்காலத்திலும்**" பிரயோகிக்கும்படி அவைகளை வைத்து வைத்திருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத "**இனிமேலும் சம்பவி யாததுமான**" "**ஆபத்து காலம்**" (தானி. 12 : 1; மத். 24 : 21), 1914-ல் மகா உலக போர் முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து உலக புரட்சி மற்றும் உலக அரசின்மை வரையிலும் நீடிக்கும். இந்த "**உபத்திரவ காலத்தின்**" மூன்று பகுதிகளும் 1 ராஜா. 19 : 11, 12-ல் காற்று, பூமியதிர்ச்சி மற்றும் அக்கினி என்று அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் விரிவான கருத்தில் இந்த "**உபத்திரவ காலமானது**" 1914 வரை நடத்திவந்த நாற்பது வருட காலத்தையும் உள்ளடக்கி யிருக்கிறது. இந்த மகா "**உபத்திரவ காலத்தில்,**" அதாவது இந்த "**கலகமும் யுத்தமும்**" உள்ள நாட்களில் இரட்சிப்பின் அதிபதியும் சேனைத் தலைவருமாகிய, இயேசுவின் கீழ் தலையும் சரீரமும் சேர்ந்த கிறிஸ்து ஓர் சேனையாக வெளிப்படுவார்கள். இருளின் அதிபதியாகிய சாத்தா னுடைய வழிநடத்துதலின் கீழிருக்கிற தப்பறையின் சேனைகளையும், பாவத்தையும் அறியாமையையும் தாக்கி அழிக்கும்படியாக, தேவன் தம்முடைய பண்டசாலைக்குள் வைத்திருக்கிற அடையாளமான கல்மழையை வெளிக் கொண்டுவந்து இந்த நாட்களில் பிரயோகிப்பார். இந்த யுத்தத்தைக் குறித்தும் கிறிஸ்துவின் வருகையைக் குறித்தும் ஓர் சித்திர வடிவில் வெளி. 19 : 11-21-ல் விவரிக்கப்பட்டிருக்கிறது. (வெளி. 17 : 14). அதில் உலகம் மற்றும் மதம் சம்பந்தமான சத்தியங்கள் இயேசுவினுடைய வாயிலிருந்து புறப்படுகிற கூர்மையான பட்டயமாக காண்பிக்கப்பட்டுள்ளது.

"**தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும்** (அவருடைய ஜுவாலித்து எரியும் நியாயத்தீர்ப்புகள் பட்சித்து அழிக்கும் கோபமாக தீமை மீதும் தீமை செய்பவர்கள் மீதும் இருக்கும்) **வானத்திலிருந்து வெளிப்படும்போது**" இந்த அடையாளமான கல்மழையாகிய கடினமான, இடுக்கண் தரும் சத்தியங்கள் குறிப்பாக சாத்தானுடைய ராஜ்யத்தை அழிக்கிற தாய் அமையும் (2 தெச. 1 : 7, 8). அவர் தமது எபிபனியில் பெரிய அந்திகிறிஸ்து அமைப்பு முறையை (உண்மை சபைக்கு எதிர்மறையானதாக சாத்தானால் ஏற்படுத்தப்பட்டது) அழித்து, தம்முடைய வாயின் சுவாசத்தினாலும் (போதனையினால்), "**தம்முடைய வருகையின்** [கிரேக்க மொழியில் பரூஷியா] **பிரசன்னத்தால்** (கிரேக்க மொழியில் எபிபனியா) **நாசம் பண்ணுவார்.**" (2 தெச. 2 : 8). "**வாதை பெருவெள்ளமாய்** (உபத்திரவ காலம்) **புரண்டு**" வருகையிலும் (ஏசா. 28 : 15-18), கல் மழையானது (தப்பறைகளை அழிக்கும் கடினமான, கடுந்துன்பம்தரும் சத்தியங்கள்) பொய் என்னும் அடைக்கலத்தை (நித்திய வேதனை, ஆத்துமா அழியாது, மரித்தோர் இன்னும் உயிரோடிருக்கிறார்கள் முதலான பல கொள்கைகள்) அழித்துவிடும். தண்ணீர்கள் (சத்தியங்கள்) மறைவிடங்கள் வழியாக புரண்டு வருகையிலும் (இந்த தப்பறைகளுக்கு முடிவுண்டாக்கப்பட்டு முற்றிலுமாக அழித்தொழிக்கப்படும். கர்த்தருடைய எபிபனியில் அவர் வெளிப்படுத்தப்பட்டு, பேரொளியால் அவர் பிரகாசிக்கும் அந்த நாளில் தப்பறையானது நிச்சயமாய் வெளிப்படுத்தப்பட்டு ஓடிப்போகும். தேவன் கிறிஸ்துவின் மூலமாக, சத்தியத்தின் பிரகாசமான வெளிச்சத்தினால் இருளில் மறைந்திருக்கிறவைகளை முழுவதும் வெளியரங்கமாக்கி, அறியாமையையும் மூட நம்பிக்கைகளையும் துன்மார்க்கருடைய தப்பறைகளையும் நீக்கிவிடுவார். (1 கொரி. 3 : 13; 4 : 5; எபி. 4 : 12)!



கல்மழையானது அதிக வேதனையளிப்பதும், அழிக்கும் தன்மையுடையதாயும் இருப்பதால், அவை தேவன் உபயோகிக்கிற கடினமான, கடுந்துன்பம் தரும் சத்தியங்களையும் அடையாளப்படுத்துகிறது.

S. Vol-6, புது சிருஷ்டி (ஆங்கில பதிப்பில் பக்கம் 175) என்ற புத்தகத்தில், "**எகிப்தின் மீது வந்த பத்து வாதைகள்** (முதல் மூன்றும், கடைசி ஏழு வாதைகளும்) **இந்த சுவிசேஷ யுக முடிவை முன்னடையாளப்படுத்தும் உருவகமாய் சொல்லப்பட்டிருக்கிறது**" (வெளி. 15 : 1) என்று விளக்கப்பட்டுள்ளது. எகிப்தின் மேல் வந்த பத்து வாதைகளில் ஏழாவது வாதையாகிய "**இடி முழக்கங்களும் கல்மழையும்,**



ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும் – மத்தேயு 24 : 21

***கல்மழையோடே கலந்த அக்கினியும் மிகவும் கொடிதாயிருந்தது***" என்று யாத். 9 : 22-34-வரையுள்ள வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. நிறைவேறுதலில், இங்கே இந்த சுவிசேஷ யுக முடிவில் அநேக விவாதங்களும் (இடி முழக்கங்கள்), தேவனுடைய கடுமையான நியாயத்தீர்ப்புகளையும் (அக்கினி) கடினமும், கடுந்துன்பம்தரும் சத்தியங்களும் (கல்மழைகள்) பலமாய் பொழிகிறதையும் நாம் கண்டுகொண்டு இருக்கிறோம். இதுபோன்று இன்னும் அதிகமாய் தொடர்ந்து வரும்.

## யோசுவாவின் நீண்ட நாள்

இது கல்மழை உருவகத்தை மிகத் தெளிவாக முக்கியப்படுத்துகிற மற்றுமொரு தீர்க்கதரிசன அடையாளமாகும். இங்கே சுவிசேஷ யுக முடிவில் சம்பவிக்கிற தனிச்சிறப்புடைய நிறைவேறுதல்கள் யோசுவா 10-ஆம் அதிகாரத்தில் காணப்படுகிறது. எமோரியரின் ஐந்து ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும் (வச. 3, 5) கானானுக்குள்ளே பிரவேசித்தபோது யோசுவாவுக்கும் இஸ்ரவேலுக்கும் விரோதமாக யுத்தம் பண்ணினர். இங்கே இந்த யுக முடிவில் நம்முடைய ஆண்டவருக்கும் (நிறைவேறுதலான யோசுவா) அவருடைய ஜனங்களுக்கும் (நிறைவேறுதலான இஸ்ரயேலர்கள்) விரோதமாக எழும்பின ஐந்து பெரும் கொழித்தல் தப்பறைகளையும், வகுப்பாரையும் குறிப்பிடுகிறது. அடையாளத்தில் (வச. 11) தேவன் எமோரியர்களின் மீது "**பெரிய கற்களை**" விழப்பண்ணினார்; அவர்கள் "**கல்மழையினால்**" செத்தார்கள். நிறைவேறுதலில், ஐந்து பெரும் கொழித்தல்களும் (மீட்கும் பலியை மறுதலித்தல், தேவ நம்பிக்கையை புறக்கணித்தல், பாபிலோனிய விஷயங்களையும் சத்தியத்தையும் கலப்படமாக்கும் இணக்கவாதம், வேதத்தில் சொல்லப்படாத உலகப்பிரகாரமான சீர்திருத்தங்கள், முறுமுறுத்தலும் முரண்படுதலும்) அவைகளைச் சார்ந்தவர்களும் தேவனால் விரட்டப்பட்டு, முற்றிலும் தவறு என



அவர்கள் பெத்தொரோனிலிருந்து இறங்குகிற வழியிலே இஸ்ரவேலுக்கு முன்பாக ஓடிப்போகையில், அசெக்காமட்டும் ஓடுகிற அவர்கள்மேல் கர்த்தர் வானத்திலிருந்து பெரிய கற்களை விழப்பண்ணினார், அவர்கள் செத்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் பட்டயத்தால் கொன்றவர்களைப் பார்க்கிலும் கல்மழையினால் செத்தவர்கள் அதிகமாயிருந்தார்கள்.

யோசுவா 10 : 11

நிரூபிக்கப்பட்டு கவிழ்க்கப்படுவதற்காக கடினமான, கடுந்துன்பங்களைத்தரும் (தகர்த்து அழிக்கும்) சத்தியங்களை அவைகள் மீது பொழிந்து கொண்டிருக்கிறார். (சந்திரனும் சூரியனும் "**தரித்து நின்றது**"பற்றிய விபரங்களுக்கு, BS 207-ஐ பார்க்கவும்).

## ஏசாயா 30 : 27–33 பற்றிய ஆராய்ச்சி

சுவிசேஷ யுக முடிவில் இங்கே சம்பவிக்கிற காரியங்களை வேறு பல அடையாளங்களோடு கல்மழையும் குறிப்பிடப்பட்டிருப்பதை ஏசா. 30 : 27-33 மிக அழகான முறையில் தீர்க்கதரிசனமாக விவரிக்கிறது. நிச்சயமாக, உபத்திர காலத்தில், புதிய மற்றும் பழைய ஏற்பாடுகள் "**தேவனுடைய வாயின்**" (மத். 4 : 4) 'உதடுகள்' சினத்தால் நிறைந்து அவருடைய நாவு (அவருடைய போதனைகள்) எல்லா பாவத்திற்கும் தப்பறைகளுக்கும் (ஏசா. 3 : 27) எதிராக பட்சிக்கிற அக்கினிபோல இருக்கும். அவருடைய சுவாசமானது (அவருடைய வார்த்தை, அவருடைய போதனை மற்றும் அவருடைய செயல்களின் வலிமையும், ஆவியும்) உலக மனுக்குலத்திற்கு கடினமான சூழ்நிலைகளை ஏற்படுத்தும்படி, கழுத்து மட்டும் எட்டுகிறதும் மூழ்கடிக்குமளவு எழும்புகிறதுமான ஆற்றுவெள்ளத்தைப் போல, இந்த உபத்திரவ காலத்தில் அழிக்கின்ற உபத்திரவங்களினால் அவர்களை சோதித்து கொழித்தெடுக்கிறார். (ஏசா. 11 : 4; வெளி. 19 : 15; சங். 107 : 25-28). "**இந்த உலகத்தின் அதிபதியாகிய**" சாத்தான் (2 கொரி. 4 : 4) அவர்களுடைய மனங்களை குருடாக்கி அவர்களுடைய உருவகமான தாடைகளிலே குதிரையின் கடிவாளத்தைப் போன்றதைப் போட்டு அவர்களுடைய பேச்சிலும் ஊழியங்களிலும் தவறும்படி செய்கிறான். (ஏசா. 30 : 28).

பொதுவான மனுக்குலமானது இந்த உபத்திரவ காலத்தில் கடுமையான துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருப்பதால், திகிலினாலும், பயத்தினாலும் அவர்களுடைய இருதயங்கள் சோர்ந்து போகிறது. ஆனால், தேவனுடைய உண்மையான ஜனங்கள் அப்படியில்லாமல் வேறு விதமான மனநிலையுடையவர்களாய் இருக்கின்றனர். அவர்களுடைய இருதயங்களிலும் அவர்களுடைய உதடுகள் மேலும், ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்துதல் வரையுள்ள வேத வாக்கியங்களுக்கு இசைவாக, ஒரு புதுப் பாட்டைப் போன்ற (சங். 40 : 3) இசைவான செய்தியை வைத்திருக்கிறார்கள். இந்த செய்தியின் காரியங்களிலுள்ள விசேஷம் இயேசுவின் இரண்டாம் வருகையும், சாத்தானின் ராஜ்யம் அழிக்கப்பட்டு பூமியில் நித்திய மெய்யான சமாதானத்தோடுகூடிய நித்திய அரசாட்சியாக தேவனுடைய ராஜ்யமானது ஸ்தாபிதமாகும் என்பதேயாகும். தீர்க்கதரிசனங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறி வருகிறதை அவர்கள் காண்கையில், "தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று" அறிகிறதினால் தங்களுடைய தலைகளை உயர்த்தி மகிழுகின்றனர் (லூக். 21 : 25-32). அவர்கள் "**கர்த்தருடைய பர்வதமாகிய** (இராஜ்யத்திற்கு) **இஸ்ரவேலின் கன்மலையண்டைக்குப்போக நாகசுரத்தோடே நடந்து வருகிறபோது மகிழுகிறதுபோல மகிழுவீர்கள்.**" (ஏசா. 30 : 29).

இருளானது ஒளியை வெறுக்கிறது. மனுஷர் பொதுவாக வெளிச்சத்தைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறார்கள். ஏனெனில் அவர்களுடைய கிரியைகள் பொல்லாதவைகளாக இருக்கிறது. (யோவா. 3 : 19, 20). ஆதலால், "**அவருடைய ஆயத்தம் பண்ணும் நாளில்**" (நாகூ. 2 : 3) ஒரு பகுதியாகிய தம்முடைய புயத்தை (கர்த்தராகிய இயேசு – ஏசா. 53 : 1) வெளிப்படுத்துவதின் மூலம் இந்த "**பழிவாங்கும் நாளில்**" (ஏசா. 34 : 8; 63 : 4), தேவன் தம்முடைய, மகிமையின் சத்தத்தை கேட்கப்பண்ணி, "**உக்கிர கோபத்தினாலும், பட்சிக்கிற அக்கினி ஜுவாலையினாலும்** (தேவனுடைய எரிச்சலின் அக்கினியினால் – செப். 1 : 18; 3 : 8, 9), **இடியினாலும்** (கொழித்தல் மற்றும் அசைத்தல் மூலமாக சம்பவிக்கிற காரியங்களினாலும்), **பெரு வெள்ளத்தினாலும்** (உலகத்தின் மீது இப்பொழுது இருக்கிற உபத்திரவ காலம், 1914 முதல் உலக யுத்தத்தில் ஆரம்பித்து உலக புரட்சி மற்றும் அரசின்மை வரை அதிகரித்து முடிவுக்குவரும்), **கல் மழையினாலும்** (கடினமும், கடுந்துன்பம்தரும் சத்தியங்கள் பாவத்தையும் தப்பறையும் வெளியரங்கமாக்கி, அவற்றை பறந்தோடச் செய்யும்) **தம்முடைய நியாயத்தீர்ப்புகளை வெளிப்படுத்தும் போது அசீரியன்** (தேவனுடைய ஜனங்களை கொள்ளையடித்து சூறையாடிய சாத்தானின் ஊழியக்காரர்கள்) **கர்த்தருடைய சத்தத்தினாலே நொறுங்குண்டு போவான்.**" (ஏசா. 30 : 30, 31.

தண்டாயுதத்தினால் (தேவனுடைய அலுவலக ஒழுங்குகள், செயல்கள் மற்றும் திட்டங்கள் நிறைவேறுதல்)

அவனை அடிப்பார். "**கர்த்தர் அவன்** (அசீரியன்) **சுமத்தும் ஆக்கினைத்தண்டம் செல்லுமிடமெங்கும், மேளங்களும் வீணைகளும் இசைவிணக்கமாக** (வெளியரங்கமாக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையின் சத்தியம்) **அதினுடன் போகும்: கொடிய யுத்தங்களினால் அவனை எதிர்த்து யுத்தஞ்செய்வார்**" ஏசா. 30 : 31, 32; 13 : 4 - 11; 14 : 22-27; செப். 2 : 13).

"**தோப்பேத் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டது: ராஜாவுக்கு அது ஆயத்தப்படுத்தப்பட்டது: அதை ஆழமும் விசாலமுமாக்கினார்: வேகும்படி அக்கினியும் மிகுந்த விறகுமுண்டு: கர்த்தரின் சுவாசம் கெந்தகத் தீயைப்போல அதைக் கொளுத்தும்**" (ஏசா. 30 : 33). இங்கு விவரிக்கப்பட்டுள்ள தோப்பேத் என்ற பதமானது சொல் அர்த்தத்தின்படி "**எரிகிற இடம்**" என்பதாகும். அது கெஹன்னா (Gehenna) என்ற அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல் என நாங்கள் புரிந்து கொள்கிறோம். (மாற். 9 : 47, 48; யாக். 3 : 6; வெளி. 20 : 10, 14, 15). அதிலிருந்து தப்பித்து வெளியேற முடியாது என்பதை "**அவர் அதை ஆழமும் விசாலமுமாக்கினார்**" என்ற வார்த்தைகள் தெரிவிக்கின்றன. அது முழுமையாக அழித்துவிடும் என்பதை "**வேகும்படி அக்கினியும் மிகுந்த விறகுமுண்டு**" என்ற வார்த்தைகள் விவரிக்கிறது. அதனுடைய நித்திய அழிவின் தன்மையைக் குறித்து "**கர்த்தருடைய சுவாசம்** (வல்லமை) **கெந்தகத் தீயைப்போல அதை கொளுத்தும்**" என்றும் அதன் வார்த்தைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. சந்தேகமில்லாமல், இந்த பொல்லாத உலகத்தின் அதிபதியாகிய சாத்தானுக்காக இது ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. அவனே இந்த நிறைவேறுதலான எகிப்தின் மீது அரசாளுகிற நிறைவேறுதலான பார்வோனாகவும் (ஏசா. 30 : 1-14), நிறைவேறுதலான பாபிலோனின் நிறைவேறுதலான நேபுகாத்நேச்சாராகவும் (ஏசா. 30 : 27-33) இருக்கிறான்.

## எசேக். 13 : 10-16; 38 : 22- ஓர் ஆய்வு

சாத்தானுடைய ராஜ்யத்தின் அரண்கள் பாவம் மற்றும் தப்பறை என்ற உறுதியில்லாத சாரமற்ற சாந்தினால் பூசப்பட்டுள்ளது. சமாதானமில்லாதிருந்தும், சமாதானம் சமாதானம் என்று அநேக மதபோதகர்கள் சொல்லுகிறார்கள் (எரே. 6 : 14; 8 : 11). சாத்தானுடைய ராஜ்யமானது இப்பொழுது அழிக்கப்பட்டு வருகிறது என்பதும், நாம் இந்த யுக முடிவில் வாழ்கிறோம் என்ற போதனையும் முட்டாள்தனமானது என்று வலியுறுத்தி அதனை குறித்து பரியாசம் பண்ணுகிறவர்களாய் இருக்கிறார்கள். (2 பேது. 3 : 3, 4). அவர்கள் ஜனங்களை ஏமாற்றுகின்றனர். அவர்களில் அநேகர் தங்களை போதனையிலும், நடக்கையிலும் கிறிஸ்தவர்கள் என சொல்லிக் கொண்டு, தவறானவற்றை முன் வைக்கிறார்கள். அவர்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள். அவர்கள் தங்கள் பலத்தை, 'சுயநலம்' என்ற அஸ்திபாரத்தின்மேல் கட்டி, அடையாளமான சாரமில்லாத சாந்தினால் பூசுகிறார்கள். (எசே. 13 : 10). ஆனால், சாத்தானுடைய அமைப்பு முறை கவிழ்க்கப்பட்டு, பூமியில் தேவனுடைய ராஜ்யத்திற்கு வழியை ஏற்படுத்தும் என்று அவர் கட்டளை பிறப்பித்திருக்கிறார். (எசே. 13 : 11-15). "**அது** (சாத்தானின் இராஜ்யம்) **இடிந்து விழுமென்று சொல்: வெள்ளமாகப் பெருகுகிற** (சத்தியம்) **மழை பெய்யும்: மகா கல்மழையே** (கடினமான நிலைகுலையச் செய்யும் சத்தியங்கள்) **நீ சொரிவாய்: கொடிய புசல்காற்றும்** (1914 முதல் 1918 வரையும், பின்னர் 1939 முதல் 1945 வரை நிகழ்ந்த உலக யுத்தத்தின் இரண்டு பகுதிகளும்) **அதை பிளக்கும்** [பர்வதங்களை (இராஜ்யங்களை) **பிளக்கிறதுமான பலத்த பெருங்காற்று உண்டாயிற்று**" - 1 ராஜா. 19 : 11]. "**..... என் உக்கிரத்திலே நிர்மூலமாக்கத்தக்க பெருங்கல்மழையும் சொரியும் .... அப்பொழுது நீங்கள் சாரமில்லாத சாந்தைப் பூசின சுவரை நான் இடித்து, அதின் அஸ்திபாரம் திறந்துகிடக்கும்படி அதைத் தரையிலே விழப்பண்ணுவேன்: உள்ளே இருக்கிற நீங்கள் நிர்மூலமாகும்படி அது விழும்: அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள்.**" இங்கே எருசலேம் நகரம் என்பது விழுந்துபோன பெயரளவான தேவஜனங்களை குறித்துக் காட்டுகிறது. இது மகா பெரிய தேவ துரோக பெயரளவு கிறிஸ்தவ அமைப்பு முறையான, கிறிஸ்தவத்தை மகாபாபிலோன் என்றழைக்கப்பட்ட கிறிஸ்தவ மண்டலத்தின் வெளி. 17 : 1-5; 18 : 1-4), மதம், அரசாங்கம் அவைகளின் அனைத்து தப்பறைகள் மற்றும் மாய்மாலங்களோடு சேர்த்து இந்த மகா உபத்திரவ காலத்தில் கவிழ்க்கப்பட்டு "அகன்று போகும்" (வெளி. 19 : 11-21; 20 : 11) என்பதை சித்தரித்துக்காட்டுவதற்காக தீர்க்கதரிசனமாக உபயோகிக்கப்பட்டுள்ளது. இப்படி சுவரில் "**சாரமில்லாத சாந்தை**" பூசினவர்களும், "**சமாதானம் இல்லாதிருந்தும் சமாதானம் உண்டென்று தீர்க்கதரிசனம் காண்கிற**" அதினுடைய தீர்க்கதரிசிகளும், அதின் பெரிய போதகர்களும், பிரசங்கிமார்கள் அனைவரும் கள்ள தீர்க்கதரிசிகள் என நிரூபிக்கப்படுவார்கள். (எசே. 13 : 16).

உபத்திரவ காலத்தின் இறுதியில் மாம்ச இஸ்ரவேலரின் மேல் "**யாக்கோபின் உபத்திரவத்தின்**" கடைசி பகுதி சம்பவிக்கும் (எரே. 30 : 5-7). கூட்டமான ஜனங்கள் ஒன்று சேர்ந்து மீண்டும் கூட்டிச்சேர்க்கப்பட்ட மாம்ச இஸ்ரவேலருக்கு எதிராகச் சென்று, அவர்களைக் கொள்ளையாட வகை தேடுவார்கள் என எசேக்கியேல் 38 மற்றும் 39-ஆம் அதிகாரங்கள் தெரிவிக்கின்றன. (மேலும் விபரங்களுக்கு E.Vol. 16, பக்கம் 130, 131-ஐ பார்க்கவும்). மாம்ச இஸ்ரவேலருக்கு விரோதமாக கொள்ளையாட எழும்பினவர்களை முற்றிலுமாக அழிக்குக்கும்படியாக தேவன் அவர்களுக்கெதிராக போரிடுவார். மேலும் மற்ற நியாயத்தீர்ப்புகளின் மத்தியிலும், தேவன் "**பெருங்கல் மழையை**" அவர்கள்மேல் வருஷிக்கப் பண்ணுவார் என எசே. 38 : 22 குறிப்பிடுகிறது. அதாவது, சாத்தானுடைய தப்பறைகளை அழிப்பதற்கும், மனிதருடைய பெருமையைத் தாழ்த்தி உதவி செய்வதற்கும் அவரை ஏற்றுக்

கொள்வதற்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதற்கும், அவருடைய "**அமர்ந்த மெல்லிய சத்தத்தை**" அவர்கள் கேட்கும்படிக்கும் "**யுத்தமும் கலகமுடைய நாள்**" முடியுமட்டும் தேவன் கடினமான தகர்த்து அழிக்கும் சத்தியங்களைத் தொடர்ந்து பிரயோகிப்பார் (சங். 46 : 8-10; 1 ராஜா. 19 : 12).

அதன்பின் பூமியின் மேல் சமாதானத்தின் தேவனுடைய ராஜ்யம் வரும். "**புதிய வானமும்** (சாத்தானுடைய அதிகாரத்திற்கு பதிலாக, கிறிஸ்துவினுடைய ஆவிக்குரிய அதிகாரம் அமையும்) **புதிய பூமியும்** (பாவம், தப்பறை, மற்றும் சுயநலத்தினால் போன்றவற்றில் மூழ்கியிருக்கிற தற்போதைய மானிட சமுதாய ஒழுங்கிற்கு பதிலாக ஓர் புதிய சமுதாய ஒழுங்கு) **காணப்படும்: முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின: சமுத்திரமும்** (மனுக்குலத்தின் இளைப்பாறுதலற்ற அராஜகமான பெருங்கூட்டங்கள்) **இல்லாமற் போயிற்று**" (வெளி. 21 : 1; ஏசா. 57 : 20; 60 : 5).

## வெளி. 16 : 18-21 பற்றிய ஆராய்ச்சி

சாத்தானுடைய ராஜ்யம் கவிழ்க்கப்படுதல் குறித்து வெளி. 16 : 18-21-வரையுள்ள வசனங்களில் விவரிக்கப் பட்டுள்ளது. அங்கே மறுபடியும் கல்மழையானது ஓர் அடையாளமாக உபயோகிக்கப்பட்டுள்ளது. "**சத்தங்களும்** (பெரும்பொது அறிவிப்புகளும் சுயாதீனத்திற்கும் அறிவிற்குமுரிய சண்டைகளும்) **இடிமுழக்கங்களும்** (விவாதங்கள்), **மின்னல்களும்** (தற்போதுள்ள சமுதாய ஒழுங்குகளைப் பற்றியும், ஆவிக்குரிய அதிகாரத்தின் வல்லமைகளைப் பற்றியும், அடையாளமான வானம் மற்றும் பூமியைப் பற்றிய காரியங்கள் வெளிச்சத்திற்கு வருகிறதைக் குறித்த அறிவு வெளிப்படுதல்) **உண்டாயின: பூமி மிகவும் அதிர்ந்தது பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள் முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சி உண்டான தில்லை**" (மனுக்குல சமுதாயத்தின் ஒரு அசைத்தல் - ஒரு பொதுவான எழுச்சி - இப்படியொரு எழுச்சி இதற்கு முன்பதாகவும் சம்பவித்ததில்லை, இதற்கு பின் இனி சம்பவிக்க போகிறதுமில்லை - 1 ராஜா. 19 : 11; ஆகாய் 2 : 6, 7; எபி. 12 : 26-29; ஏசா. 13 : 13; தானி. 12 : 1; மத். 24 : 21). **அப்பொழுது மகா நகரம்** (பாபிலோன், பெயரளவான கிறிஸ்தவ மார்க்கம்) **மூன்று பங்காக** (மதம், சமூகம், அரசாங்கம் சம்பந்தமாக) **பிரிக்கப்பட்டது. புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன. மகா பாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது. தீவுகள்** (சாத்தானுடைய ராஜ்யத்தில் ஏறக்குறைய குறைவான சுயாட்சியான அரசாங்கங்கள் - அதாவது குடியரசுகள்) **யாவும் அகன்று போயின: பர்வதங்கள்** (இராஜ்யங்கள் - வெளி. 11 : 15) **காணப்படாமற் போயின. தாலந்து நிறையான** (பாவம் மற்றும் தப்பறையை தங்கள் பலத்தினால் கடுமையாக அழிக்கும் வல்லமையுடைய "கனமான" சத்தியங்கள்) **பெரிய கல்மழையும்** (வெளி. 11 : 19-ஐ ஒத்துப்பார்க்க) **வானத்திலிருந்து** (கடினமும் கடுந்துன்பந்தரும் சத்தியங்களை கொடுக்கிற தேவனிடத்திலிருந்து) **மனுஷர்மேல் விழுந்தது: அந்த கல்மழையினால் உண்டான வாதையினிமித்தம் மனுஷர்கள் தேவனை தூஷித்தார்கள்.** (வெளி. 16 : 9, 11); **அந்த வாதை கொடி தாயிருந்தது.**"

நம்முடைய பாட பகுதியின் மூலமாக, உறைந்த மழையிலும் கல்மழையிலும் இருக்கிற அநேக அதிசயங்களை நாம் கண்கிறதினால், நமது தேவனையும் அவரது கிரியைகளையும் நாம் மதித்துணர்வதற்கு ஏதுகரமாயிருக்கிறது. அனைத்து தப்பறைகளுக்கும் அநீதிகளுக்கும் எதிரான, யுத்தம் மற்றும் கலக நாளுக்கென்றும், உபத்திரவ காலத்திற்கென்றும் அவர் வைத்திருக்கிற அடையாளமான உறைந்தமழையின் பண்டசாலைக்காகவும், அடையாளமான கல்மழையின் பண்டசாலைக்காகவும் நாம் அவருக்கு நன்றி செலுத்துவோமாக. சாத்தானுடைய ராஜ்யத்தை கவிழ்த்து பூமியில் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிதமாகுவதற்கு ஆயத்தம் செய்ய அவை உதவிகரமாக இருப்பதால் நாம் அவருக்கு நன்றி செலுத்துவோமாக. அதற்காக ஊக்கமாக ஜெபிக்கும்படி இயேசுவானவர் நமக்குக் கற்றுத் தந்திருக்கிறார். ***

**அறிவிப்பு**

**2014-ஆம் ஆண்டிற்கான நமது கர்த்தருடைய ஞாபகார்த்த பஸ்கா ஏப்ரல் மாதம் 12-ம் தேதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்குமேல் என்பதை அறிவிக்கிறோம்.**

Visit us at : **www.biblestandardindia.com**

*For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :*

Bro. V. Vincent Jeyakumar
Laymen's Home Missionary Movement
32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY